BDJ-2-TA

# இயேசுவை வீழ்த்துவதற்கான போராட்டம் – நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில் இயேசுவை பற்றி முற்றிலும் மாறுபட்ட கதையின் அடிப்படையில் சொல்ல ப்பட்டிருக்கும் காரியங்களை விவாதிக்க இருக்கிறோம். அவற்றில் ஒன்று கிறிஸ்தவம் – இயேசுதான் மேசியா, தேவ குமாரன், நமது பாவத்திற்காக மரித்து, மரணத்தில் இருந்து உயிர்த்தவர்,நம்மை தனிப்பட்ட விதத்தில் பரிசுத்தப்படுத்தி தூய்மை படுத்தி நித்திய ஜீவனை அளிப்பவர்.

இன்னொரு கதையை பற்றி சொல்லவேண்டுமானால் அதுதான் – இயேசுதுவம். இந்த கதையில், இயேசு ஒரு சாதாரண மனிதன் எந்த அற்புதங்களையும் நிகழ்த்தவில்லை, தம்மை மேசியா என்று தேவனுடைய குமாரன் என்றோ சொல்லவில்லை, யாருடைய பாவத்திற்காகவும் மரிக்கவில்லை, அவரை விசுவாசிப்பதையும் ஆராதிப்பதையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது.

இந்த புதுவிதமான இயேசுதுவம் என்கிறதான கதை இன்றைய ஊடகங்கள் மூலமாக பல காவிய கதைகள், பலவிதமான புத்தகங்கள், தொலைக்காட்சி சிறப்பு நிகழ்சிகள் மூலம் பிரபலமாகிறது. ஜனங்கள் வரலாற்று நாயகனாகிய இயேசுவை பற்றி எது உண்மையை சொல்கிறதென்று அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். இன்றைக்கு அதை தெரிந்துகொள்வோம். இன்றைய ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியின் விசேஷ பகுதிக்கு உங்களை வரவேற்கிறோம்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு உங்களுக்காக விசேஷ பகுதியை வைத்திருக்கிறோம். இன்றைக்கு ஊடகங்கள் மூலம் பரவிக்கொண்டிருக்கும் பிரபலமாகிகொண்டிருக்கும் ஒரு காரியத்தை குறித்து பார்க்க இருக்கிறோம். ஊடகங்கள் என்று சொல்லும்போது பிரபலமான நாவல்களுக்கு அதிலடங்கும் தி டா வின்சி கோட், பிரபலமான புத்தகங்கள், தொலைக்காட்சி நிகழ்சிகள், இதெல்லாம் அதிலடங்கும். இயேசுவை பற்றிய புதிய தகவல்களை நமக்கு கொடுக்கும்போது, எல்லாரும் அதன் முடிவில் பாரம்பரிய கிறிஸ்தவத்தின் நிலையை மாற்றியமைக்கும்படி விளக்கம் தருகிறார்கள், நமக்கு அது தெரியும். இப்ப, நம் மத்தியில் இரண்டு விருந்தினர்கள் இருக்கிறார்கள் இருவரும் சிறந்த மேதைகள். சரி, டேரல், நீங்க சமீபத்தில் எழுதிய புத்தகம் விரையில் விற்ப்பனைக்கு வருகிறது இல்லையா, "ஊடகங்கள் விபரீதமாக மாறும்பொழுது" இந்த கட்டுரையில் என்னை தட்டிகொடுத்த ஒரு விஷயம் என்னவென்றால் நீங்க ஒரு விஷயத்தை பற்றி சொல்லியிருக்கீங்க அதாவது இந்த சமுதாயமானது இயேசுவை பற்றி நாம் பெற்ற தகவல்களை மாற்றி சொல்லுகிறது அந்த பாதை என்று கொண்டுசெல்கிறது என்று கேட்டிருக்கிறீர்கள். அதற்கு பிறகு நாம முன்னுரை பகுதியில் பேசிய காரியங்களை பற்றி சொல்லியிருக்கீங்க. இயேசுவை குறித்து இரண்டு கதைகள் சொல்லப்பட்டு வருகிறது. அதை பற்றி எங்களுக்கு சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, இந்த விபரங்கள் எல்லாம் எப்படி மாற்றப்படுகிறது என்று சொல்லன்னுன்னா இதெல்லாம் நேரடியாக பொதுமக்களை சென்று அடைவதால் தான். இவை பல்கலைகழகங்கள் மூலமாக வரவில்லை பண்டிதர்கள் மேதைகள் மூலம் வரல, ஆனா இதெல்லாம் பல்கலைகழகங்களுக்குள் இயேசுவை குறித்து சொல்லப்படும் காரியங்களை சில மேதைகள் பொதுமக்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படுகிறார்கள் என்பது உண்மைதான். அதை பொது இடத்திற்கு கொண்டுவருவதால், பொதுமக்கள் மத்தியில் இயேசுவை குறித்து இரண்டு விதமான அபிப்பிராயங்கள் உண்டானது, இரண்டையும் கிறிஸ்தவம் என்றுதான் சொல்லுகிறார்கள், ஆனா இரண்டும் முற்றிலும் வேறுபட்டவை. அதனாலதான் நா அவைகளுக்கு தனிதனி பெயர்களை கொடுத்திருக்கிறேன் ஒன்று பக்கம் கிறிஸ்தவம் – இங்கு இயேசுதான் மையப்பகுதியாக இருக்கிறார், அவருடைய கிரியைகளும் அவருடைய வார்த்தைகளும் மிகவும் முக்கியமாக கருதப்படுகிறது. இன்னொரு பக்கம் பார்க்கும்போது இயேசுதுவம், இதில்

நசரேயனாகிய இயேசுவை குறிக்கிறது, அவருடைய போதனைகள் முக்கியமானதாக இருக்கிறது, ஒரு நபராக அவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்ப ஒருபக்கம் இயேசுதான் கிறிஸ்து, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர், அபிஷேகிக்கப்பட்டவர் அவருக்குள் தேவனுடைய திட்டம் அனைத்தும் அடங்கியிருக்கிறது என்கிறது. மற்றொரு பக்கத்தில், இயேசு ஒரு தூதர் மட்டும்தான். அவர் ஒரு தீர்க்கதரிசி, அப்படின்னா அவருக்கு மதிப்பு இருக்குது, ஆனா அவர் செய்த செய்கிற கிரியைகளை வைத்து விசேஷமாக எந்தவிதங்களிலும் அவர் கருதப்படவில்லை, செய்தியை சொல்லியிருக்கிறார் அவ்வளவுதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. பொதுமக்களை தடுத்து நிறுத்துகிற சில கலந்துரையாடல்கள் என்று சொல்லி ஒருசிலத்தை அறிமுகம் செய்து வருகிறார்கள், இப்பெல்லாம் யாராவது இயேசுவை பற்றிய உரையாடலை நடத்தும்போது, ஊடகங்களில் இன்றைக்கு உரையாடல்களை தடை செய்யும் நபர்கள் இருக்கிறார். அதற்கு ஓரிரு உதாரணங்களை சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, உதாரணமாக, எழுதப்பட்ட மற்ற சுவிசேஷங்களும் இருக்கிறது ஆனால் அவை நம்மிடம் இருக்கும் வேதத்தில் சேர்க்கப்படவில்லை அதை வைத்துகொண்டு இப்போது என்ன செய்யமுடியும்? அல்லது, வரலாறானது ஜெயம்பெற்றவர்களால் எழுதப்பட்டது என்று உங்களுக்கு தெரியாதா? புதிய ஏற்பாடு ஜெயம்பெற்றவர்களால் எழுதப்பட்டது, ஆனா இப்ப தோற்றுப்போன நபர்களின் காரியங்களை பார்க்கிறோம், அதனால கருத்தை நாம் மாற்ற வேண்டும் ஏன்னா இதுல எல்லா சங்கதிகளும் சொல்லப்பட்டு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இந்த முதல் நிகழ்ச்சியில் நான் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறேன் என்று கேட்டால் இந்த தகவல்களை பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்க துவங்கிடலாம், கிறிஸ்தவத்தின் வரலாற்று வேர் எங்கிருக்கிறது: இயேசுவை பற்றி சொல்லப்பட்டிருக்கும் தகவல்கள் இயேசு மற்றும் சீஷர்கள் வாழ்ந்த நாட்களை பற்றி சொல்கிறதென்று எதினால் நம்புகிறோம். இந்த காரியம் பலவிதங்களில் இன்றைக்கு தாக்கப்பட்டு வருகிறது அதை பற்றிதான் பேசபோகிறோம், அது தி டாவின்சி கோடாக இருக்கட்டும், அல்லது ஜீசஸ் பேப்பராக, தி ஜீச டைனாசிடி, அல்லது இயேசுவின் காணமல் போன கல்லறை, இயேசுவின் குடும்ப கல்லறையாக இருக்கட்டும். இந்த காரியங்கள் அனைத்தும் இயேசுதுவம் என்பதை மையப்படுத்துகிறது. அந்த கண்ணோட்டத்தை உட்புகுத்துகிறது.

அந்த கண்ணோட்டத்தை பற்றி தா பேசனும், இதை கேட்கிற நம்முடைய கிறிஸ்தவர்களிடம் இருக்கிற பிரச்சனை என்னன்னு கேட்டா நம்முடைய பக்கத்தில் இருக்கிற துவக்கத்தின் காரியங்கள் அவங்களுக்கு தெரியாது. அதனால முதல்ல ஒரு வெளிதோற்றத்தை பற்றி அவங்களுக்கு சொல்லீட்டு பிறகு அதில் இருக்கிறவைகளை பார்க்க விரும்புகிறேன். ஆல்ரைட்? இதுதான் அதனோட அவுட்லைன். முதலாவது, இயேசு கிறிஸ்து என்கிற நபர் உண்மையாக வாழ்ந்திருக்கிறார். இரண்டாவது, அவரை பின்பற்றிய நபர்களில் இருந்து அவர் சுமார் பன்னண்டு பேரை தெரிந்துகொண்டார். மூன்றாவது, அவர் மரித்தார். அவருடைய உயிர்த்தெழுதலை குறித்தும் பார்க்க இருக்கிறார், ஆனா அவர் மரித்தார், என்பது உண்மை.

அதோடு, அவர் பரம் ஏறி சென்றதற்கு பின்பு நடக்கிற நிகழ்வை தான் பெந்தெகோஸ்தே என்கிறோம் எருசலேமில் இயேசுவோடு மூன்று ஆண்டோல் இருந்த அப்போஸ்தலர்கள் எல்லாரும், எழுந்து நின்று பிரசங்கிக்க துவங்குகிறார்கள், அப்போது மூவாயிரம் யூதர்கள் கிறிஸ்துவத்தில் சேர்ந்துகொண்டார்கள். அந்த ஜனக்கூட்டத்தில் இருந்தவர்கள், அவர்கள் மூலமாக மனமாற்றமடந்தவர்களின் எண்ணிக்கையை நாம் பெற முடியும் – அந்த எந்த மாதிரியான செய்தியாக இருந்தது, ஐம்பது நாட்களுக்கு பிறகு அவர்கள் என்ன செய்தியை பிரசங்கித்தார்கள் என்பதை குறித்தும் நாம் பார்க்க இருக்கிறோம் – ரோம ராஜ்யத்தில் இருந்து பிரிந்து சென்ற ஜனங்கள் பதினைந்து வெவ்வேறு இன மக்களை சென்றடைந்தனர், ரோமிலிருந்து சவூதி அரேபியா, துருக்கி, எகிப்து, இடையிலுள்ள தேசங்கள். உண்மை என்னவென்றால் இந்த ஜனங்கள் இந்த செய்தியை கேட்டவிடனே சபைகளை நிறுவினார்கள். ஆல்ரைட்?

இப்ப நம்மகிட்ட இருக்கிறது என்னன்னு பார்த்தீங்கன்னா இந்த புதிய ஏற்பாடும் மற்ற புத்தகங்களும் வெளிவருவதற்கு முந்தின காலத்தை சேர்ந்தவை. அதனால உண்டாகிற கேள்வி என்னன்னா, ஏ இவங்க இதை கவனிக்கிறாங்க, ஏ அவங்க இந்தமாதிரி கேள்விகளுக்கு பதில் சொல்றாங்க, "ஆர்தடாக்ஸ் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை எது, எது இல்லை? அந்த மாதிரியான காரியங்களை பற்றி அவங்க பேசுவதை கேட்க விரும்புகிறேன். சரி, முதலாவதாக, உங்கள் மத்தியில் இன்னும் ஜீவனுள்ள அப்போஸ்தலர்கள்

இருக்கிறார்கள். நீங்க ஒருவேளை சொல்லலாம், எனக்கு ஒரு கேள்வி இருக்குது, அதாவது, பேதுரு, காபி குடிக்க வருகிறார். அது ஒரு விஷயம். இன்னொரு விஷயம் என்னன்னு கேட்டா, உபதேசங்களை குறித்த அதிகப்படியான விஷயங்கள் இருக்குது, ஒப்பந்த ஆவணங்கள் போன்றது. அவை என்னவென்றும் நாம பார்க்க போகிறோம், ஆனா அதெல்லாம் இங்கதா இருக்கு – அதெல்லாம் ஆதி நிலைக்கு நம்மை அழைத்து செல்கிறது. பாடல்கள் மற்றும் கீர்த்தனைகள் இருந்தது, அதற்கு பிறகு புனித சடங்குகள் வந்தது. ஞானஸ்நானம் கர்த்தருடைய பந்தி. அதற்கு பிறகு, அப்போஸ்தலர்களுடைய நிருபங்களை பெற்று கொள்ள துவங்கினோம், நிருபங்கள் புத்தகங்கள், அவை அனைத்தும் எப்போது வெளிவந்தது என்பதை குறித்தும் நாம் பார்க்க இருக்கிறோம், இயேசு பரமேறின பிறகு அவர் முதல் முறை பெந்தெகோஸ்தே நாளில் பிரசங்கிக்க துவங்கியதற்கும் முதல் புத்தகங்கள் வெளிவந்ததற்கு எவ்வளவு காலமானது என்பதை பற்றியும் பார்க்க இருக்கிறோம். அது மட்டுமல்ல அதோடுகூட, அதுமட்டும் இல்லாம, ஜீவனுள்ள அப்போஸ்தலர்களின் மாணவர்கள் இருந்தனர் அந்த மாணவர்களின் மாணவர்கள் இருந்தனர், சபை பிதாக்கள், கிறிஸ்தவத்தின் தலைவர்கள் இருந்தார்கள். அதற்கு பிறகு பார்க்கும்போது இறுதியாக சொல்லப்படுகிற விடுபட்ட சுவிசேஷங்கள், அறிவுசார்ந்த சுவிசேஷங்கள், பிலா, பிலா, பிலா.

சரி, இதுதான்அவுட்லைன். இதிலிருந்து துவங்கிடலாம். இயேசு கிறிஸ்து உண்மையாக வாழ்ந்தார் என்று எப்படி அறிந்துகொள்ளலாம், அவர் வரலாற்று மனிதரா?

**Dr. டேரல் பாக்:** வேதாகமத்தை தாண்டி நமக்கு ஒரு நல்ல ஆதாரம் இருக்கிறது ஜோசெபஸ் அதை ஆண்டிகுய்டீசில் கூறியிருக்கிறார். பதினெட்டாம் புத்தகத்தில் இருக்கிறது. இந்த பகுதியானது, சர்சைகுள்ளானதாக இருக்கிறது ஏன்னா இதில் சொல்லப்பட்டிருக்கிற விதங்களை பார்க்கும்போது யூதர்களால் சொல்லப்படாதவைகள் போல தெரிகிறது. அதாவது அவர் கிறிஸ்துவாக இருந்தார் என்றிருக்கிறது. அதோடு உயிர்த்தெழுதலை குறித்த சில குழப்பங்கள் அங்கு காணப்படுகிறது. ஜோசெபஸ் அதை எழுதி இருக்க முடியாது. ஆனால் இந்த கூற்றை பார்க்கிற அநேகருடைய கருத்து என்ன வென்றால் இயேசு இருந்திருக்கிறார் என்பதே. ஒரு அசாதாரணமான ஊழியம் அவருக்கு இருந்தது அதில் அசாதாரணமான காரியங்களை செய்திருக்கிறார். பிலாத்துவின் காலத்தில் யூத தலைவர்களின் தூண்டுதலினால் அவர் சிலுவை அறைந்து கொல்லப்பட்டார். அந்த மரணத்தின் மூலமாக அவர் பல காரியங்களை செய்திருக்கிறார். சரி, அதெல்லாம் எளிமையான உண்மை சம்பவங்கள். இருந்தாலும் அநேக ஜனங்களுடைய விவாதம் என்னன்னா இயேசு கிறிஸ்து ஜீவித்தார் என்பது நிஜமல்ல என்பதே, அதற்கு இது மிகப்பெரிய முக்கிய ஆதாரமாகும், யூதர்களின் வரலாற்றில் இருந்து வருகிறது, அந்த கால வரலாற்றில் இதுவும் எழுதப்பட்டிருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்ப நமது பழைய நண்பருடைய காரியத்தை பார்க்கலாம் கேரி ஹேபர்மஸ் அவருடைய வரலாற்று இயேசு என்ற புத்தகத்தில், அவர் கிட்டத்தட்ட பதினேழு கிறிஸ்தவரல்லாத பதிவுகளில் கிறிஸ்துவின் வாழ்க்கையை பற்றி சொல்லப்பட்டிருக்கிற காரியங்களை சேகரித்து அதில் நூற்றி இருபத்தி ஒன்பது உண்மைகளை கண்டறிந்தார், சரியா. இது புதிய ஏற்பாட்டு நாட்களுக்கு முன்னிருந்த காரியங்கள். அவை புதிய ஏற்பாடு காரியங்களுக்கு ஒத்திருப்பதாக இருக்கிறது, அவை அனைத்தும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருப்பவைகளை நிருபிப்பவையாக இருக்கிறது. அடுத்து, நமக்கு வரலாற்று ஆவணங்களிலும் நமக்கு ஆதாரங்கள் இருக்கிறது. ஆதிகால வரலாற்று ஆவணங்கள் என்னென்ன?

**Dr. டேரல் பாக்:** சரி, நம்மிடம் இருக்கிற ஆதிகால ஆவணங்கள் என்னன்னு பார்த்தா அது புதிய ஏற்பாட்டை தவிர வேறு எதுவும் இல்லை. இந்த நான்கு சுவிசேஷங்களும், அப்போஸ்தலர் நடபடிகளும், பவுலினால் எழுதப்பட்ட நிருபங்கள் மற்றும் பிற நிருபங்களும் தான். முதல் நூற்றாண்டில் பலவிதமான ஆவன உபகரங்கள் நமக்கு இருக்கிறது அவை அனைத்தும் புதிய ஏற்பாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை பற்றி பேசுவதன் முக்கியத்துவம் என்னன்னு கேட்டீங்கன்னா எல்லா வரலாற்று ஆவணங்களாக இருக்கிறது. முதல் நூற்றாண்டு மக்களின் நம்பிக்கை என்ன என்பதை நமக்கு கூறுகிறது. இந்த காரியங்கள் நம்மை கவர்வதாக இருக்கிறது என்பதினால் இதை பற்றி நாம இங்க பேச வரல, இதெல்லாம் தேவனுடைய வார்த்தை, ஆனா அவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் முதல் நூற்றாண்டின் மக்களின் நம்பிக்கையை சார்ந்திருந்தது அதெல்லாம் இயேசு நம்பின காரியங்களின் அடிப்படையில் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** நிச்சயமா. உண்மையா, நா கிறிஸ்துவத்திற்குள் நுழைந்தபோது, உண்மையா, நா என்னை கவர்ந்த இந்த புத்தகம் வானத்தில் இருந்து விழுந்த புத்தகம் என்று நான் சொல்லல, சரியா. இந்த புத்தகத்தை பார்க்கும்போது ஏதோ ஆதிகாலத்துல ஏறோதுக்கு முன்னால கிளவுதியுவுக்கு முன்னால நிக்கிற மாதிரி இருந்துச்சு. உண்மையதா சொல்றேன், இது அந்த காலத்தில் நடந்த சம்பவம் அந்த கால மனிதர்களை பற்றி திடமான தகவல்களை தருகிறது உண்மைதானே? அதனால இதிலிருந்து ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன், நீங்க ஒரு சில காரியங்களை ஏற்றுக்கொண்டதற்கு பிறகு ஆர்வமூட்டும் காரியங்களை நீங்கள் பார்க்கமுடியும் என்று நம்புகிறேன். இருந்தாலும் அங்கிருந்து துவங்க மாட்டோம். நம்முடைய துவக்கம், திடமான வரலாற்று ஆதாரங்கள் நமக்கு இருக்கிறதா?

சரி. இந்த உபகரணங்கள் எல்லாம், மற்ற உபகரணங்களையும் சேர்த்து தான் சொல்றேன். இயேசுவை பின்பற்றின ஒரு குழுவினர் இருந்தாங்க – எல்லாரும் பலவிதமான காரணங்களுக்காக இயேசுவை பின்பற்றுவதாக சொல்வாங்க –இல்லையா, அந்த குழுவில் இருந்து அவர் பன்னிரண்டு பேரை தெரிந்தெடுத்தார், சரியா? அந்த பன்னிரண்டு பேரை எப்படி தேர்ந்தேடுத்தாருன்னு சொல்லுங்கள்.

**Dr. டேரல் பாக்:** சரி, நமக்கு இதுல எந்த வித குழப்பமும் கிடையாது 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த குழுவில் தான் யூதாசும் இருந்தான், அப்படின்னா இயேசு தன்னை காட்டிகொடுக்கப்போகிற ஒருவனை தெரிந்தே தெரிந்துகொண்டார். சில நேரங்கள்ல ஜனங்க சொல்வாங்க, அந்த, 12 என்பது அவங்களே வைத்துகொண்ட எண். அது இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தை குறிக்கிறது அதனால இதை காவிய கதையோடு இணைத்து கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது இயேசுவை பின்பற்றுவது இஸ்ரவேலின் சூழ்நிலைக்கு ஒப்பாக இருந்திருக்கிறது. ஒருவேளை கட்டுகதையாக இருந்தா, ஒருவேளை அது அவங்களே உருவாக்கி கொண்டதாயிருந்தால், அதற்கு சில வரையறைகள் சட்டதிட்டங்கள் இருக்கும். நீங்க அப்படி சட்டதிட்டங்களை வைத்தால், ஏனோதானோவென்று தெரிந்தெடுக்க மாட்டீங்க, அப்படியிருந்தா தேவனுடைய குமாரன் தன்னை காட்டி கொடுக்கிற ஒருவனை தெரிந்துகொள்ளவதை அனுமதிக்க மாட்டீங்க. அதனால இதை, விமர்சக நிலை என்று சொல்லுகிறோம், வெட்கப்படும்படி குறைசொல்லுகிற காரியங்கள், அது பொருத்தமில்லாம இருக்கிறது போல காட்சியளித்திடும். இதெல்லாம் இதற்கு பொருந்துவது இல்லை, அதனால இதெல்லாம் கட்டுக்கதை போல தோன்றாமல் நிகழ்ந்த உண்மையாக தோன்றுகிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், இயேசு மரித்தார், டேன். உண்மை என்னன்னா, அங்க என்னமோ நடந்திருக்கு. சரி, இதற்கிடையில் நாம உயிர்த்தெழுதலை குறித்தும் பேச போகிறோம், ஆனா அவர் மரித்ததை எல்லாரும் ஒப்புகொண்டார்கள் என்பதை ஏற்றுகொள்ளனும். இயேசு கருத்தரங்கின் ஜான் டாம்னிக் கிரோசன் கூறுகிறார் வரலாற்றில் மறுக்க முடியாத உண்மைகளில் ஒன்று இயேசு மறித்தது தான். கிரட் லூட்மேன், நாத்திகர், அவர் மரித்தார் என்கிறார். சரியா? அவர், மரித்திருந்தா, அவர் எகிப்திற்கு பிரயாணம் பண்ணியிருக்க முடியாது, அவர் இந்தியாவிற்கு பிரயாணம் பன்னால, அவர் ஸ்பெயினுக்கு போகல, பிலா, பிலா, பிலா. அவர் மரித்தார், சரியா? அவர கல்லறையில் வைத்ததிலிருந்து அடுத்த ஐம்பதாவது நாள், இன்னொரு நிகழ்ச்சி இங்க சம்பவிக்கிறது, யூதர்களின் கொண்டாட்டமான பெந்தெகோஸ்தே நாள், அப்ப என்ன நடக்குது?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இயேசு பெந்தெகோஸ்தே நாளுக்கு பத்து நாள் முன்னாடி பரமேறி சென்றார், ரொம்ப நாள் இல்ல இன்னும் கொஞ்ச நாள்ல பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வருவார் அப்போது நீங்க அவரால பலப்படுத்தப்பட்டுவீங்கன்னு சொன்னாரு. அப்ப அவங்க எல்லாரும் நவமான பாஷைகளில் பேச துவங்கினார்கள் அங்கு கூடியிருந்த மத்திய கடலை சுற்றி இருந்தவர்கள், எங்கும் இருந்து வந்த யூதர்களும், அதை கேட்டு வியந்தார்கள். அந்த நாளில் அன்னைக்கே, சுவிசேஷம் எங்கும் பரவ ஆரம்பித்தது. அதனால இப்ப என்ன நடக்குதுன்னா, எல்லா சாத்தியமான வழியும் பிறந்திருடுச்சு, இயேசு கருத்தரங்கில் இதை தான் சொல்கிறார்கள், இந்த அப்போஸ்தலர்களை பற்றிய காரியங்களில் உங்களுக்கு ஞாபகமறதி உண்டாகிறது என்கின்றனர். சரி, அவங்களுக்கு உண்டான ஞாபக மறைதியால் இயேசு அவர்களுக்கு கட்டளையிட்ட காரியங்கள் மட்டும் தான் அவர்களுடைய நினைவில் இருந்தது, அது பெந்தெகோஸ்தே நாளும் முன்னமே நடதிருக்கவேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, ஒரு கேள்வி கேட்கவேண்டிய நேரம், கம் ஆன், இப்ப என்ன சொல்லவர்றீங்க அவரோட மூன்று வருஷம் இருந்தவங்க அந்த ஐம்பது நாள்ல அவர் போதிக்க கேட்ட எல்லாத்தையும் அவங்க பார்த்த எல்லாத்தையும் மறந்துட்டாங்கன்னு சொல்றீங்களா?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** சரி, அவரை பற்றி எல்லாத்தையும் மறந்திருப்பாங்கன்றத மட்டும் சொல்லாம, அவருக்கு பதிலா வேற எதையாவது சொல்லியிருப்பாங்கன்னு சொல்றாங்க, அதோட அவங்க விட்டுடல, இப்ப அவங்களுக்கு இந்த பதினொன்னு பன்னண்டு அப்போஸ்தலர்களை இல்லாம, இப்ப நூற்றுகணக்கான நபர்கள் சேர்ந்துட்டாங்க அதனால் அவங்களோட இருக்கிறவங்க சொல்வாங்க, ஒரு நிமிஷம் இருங்க. இது அந்த மாதிரி இல்ல, இது அந்த மாதிரி இல்லையே. இதை தான் இயேசுவும் சொன்னார். சமுதாயத்தினருக்கு ஞாபகம் வருகிறது, அதாவது, அவங்க இயேசு சொல்லும்போது கேள்விப்பட்ட காரியங்களை மறுபடியும் அதிக அழுத்தமா சொல்லற மாதிரி இருந்திருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது மட்டுமில்லை, இயேசு சிலுவையில் அறையப்படுவதை வேடிக்கை பார்த்துகொண்டிருந்த அதே கூட்டத்தோடு எருசலேமில் பேசிகொண்டிருந்தார்கள்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** நிச்சயமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி பீட்டர்,... அத, பத்தி கொஞ்சம் பார்க்கலாம். இப்ப ஒரு இடைவேளை எடுத்து கொள்வோம். நாம மறுபடியும் வருவோம். இந்த அவுட்லைன நாம பூர்த்தி செய்யணும். நீங்க தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இவை, தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் பேசிக்கொண்டிருக்கும் நபர்கள் Dr. டேரல் பாக், அவரோடு கூட இருப்பவர் Dr. டேனியேல் B. வால்லேஸ், நாம பேசிகொண்டிருக்கிற காரியம் என்னவென்று கேட்டீங்கன்னா திடமான ஆதாரங்களாக நம்மிடம் இருக்கிற வரலாற்று தகவல்களை பற்றிய சுவாரஸ்யமான சம்பவங்கள், கிறிஸ்துவத்தின் ஆணிவேர் இன்றைக்கு ஊடகங்கள் மூலமாக மிகப்பெரிய பாதிப்பை அடைந்து வருகிறது, மாற்றுகருத்துகள், அவங்க என்ன சொல்றாங்கன்னா நீங்க பார்த்து வளர்ந்து வந்த கிறிஸ்தவத்திற்கு மாறாக மாற்று கிறிஸ்தவம் ஒன்று இருப்பதாக சொல்கின்றனர். சரி, நாம என்ன சொல்றோம், வாவ், ஒரு நிமிஷம் இருங்க, இருங்க. இதை இன்னொரு முறை பார்க்கலாமா. நீங்க இயேசுவை ஏற்றுகொண்டிருக்கீங்க என்கிற உண்மையோடு தான் துவங்கியிருக்கிறோம். அவர்தான் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை தெரிந்துகொண்டார். அப்பறம் மரித்தார். பிறகு அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என நினைக்கிறோம், அதை பற்றியும் நாம் பேசிட இருக்கிறோம், ஆனா அவர் மரித்தார் என்ற உண்மை புரிந்திருக்கிறது. இன்னொரு உண்மை என்னன்னா ஐம்பது நாளுக்கு பிறகு இந்த அப்போஸ்தலர்கள், எல்லாரும் மூன்று வருடமாக இயேசு தங்களுக்கு போதித்த அனைத்தையும் மறந்துவிட்டார்கள் என்று சொல்வதை ஏற்றுகொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது, அவர் செய்த அற்புதங்களை மறந்துவிட்டார்களா. அது மட்டுமில்ல, இன்னொரு விஷயம், அவர்கள் சொல்வதை சுற்றி நின்று கேட்கிறவர்களின் நிலை என்ன? பேதுரு அவர்களுக்கு பிரசங்கத்தில் சொல்லுகிற அனைத்து காரியமும் அப்போஸ்தல நடபடிகளில் இருக்கிறது.

**Dr. டேரல் பாக்:** பொதுவா அவர் என்ன சொல்கிறார் என்றால் தேவன் மேசியா வரும்போதும் சம்ப விக்கும் காரியங்களை வாக்குபண்ணியிருக்கிறார் மேலும் இந்த புதிய யுகமானது அதை நோக்கி பயணிக்க துவங்கியது; மேசியா வந்துவிட்டார் என்று கூறுகிறது; தேவ ஜனங்கள் மீதி ஆவியானவர் வந்துவிட்டார், அவர் மூலமாக தேவ ஒருவருக்குள் நடப்பிக்கும் கிரியை சாட்சிகள் எழும்பத்துவங்கினது. அதைதான் ஐவரும் வலியுறுத்துகிறார், பேதுருவும் அப்படிதான், இந்த காரியங்களுக்கு நாங்களே சாட்சிகளாய் இருக்கிறோம்." )2 பேதுரு 1:16) உண்மையில், அப்போஸ்தலர்கள், இயேசு அப்போஸ்தலர்களை கொண்டிருந்ததற்கு காரணம் அவரையே சுற்றி வந்து, சிறந்த தாக்கம் பெற்ற மாணவனாக திகழ. கற்றுகொள்ளும் மனமுடைய மாணவன், அவருடைய பாதத்தில் அமர்ந்து அவர் என்ன போதிக்கிறார் என்பதற்கு செவி கொடுத்து அதை பல இடங்களுக்கு கொண்டு செல்கிரவனாக இருக்கிறார் இறுதியில் அது அந்த செய்தியினால் உலகத்திற்கு நம்பிக்கையை கொண்டுவருவதாக மாற்றம் பெற்றிடும். அதன் மூலமாக தான் தேவன் ஜனங்களுடனான முறிந்துபோன உறவை மறுபடியும் புதுபிக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். டேன், அந்த செய்தியால் 3000 மக்கள் இரட்சிப்படைந்தார்கள், சரியா? அவங்க அந்த செய்தியை ரோம சாம்ராஜ்யம் முழுவதும், அங்கிருந்து சபைகளுக்கும், அவங்களுடைய நிலையை அடைந்த அந்த 50வது நாளில் இருந்து எடுத்து செல்ல ஆரம்பித்தனர், உண்மைய சொன்னா, சபைகளை நிறுவ துவங்கினார்கள். இங்க கேள்வி என்னன்னா, அந்த சபைகளை நிருவும்படியாக அவர்கள் பிரசங்கித்த செய்தி எப்படிப்பட்ட செய்தியாக இருந்தது?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** சரி, இதுல சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா அவங்களுக்கு ஞாபக மராத்தி ஏற்பட்டது என்று சொல்வது, அந்த மாதிரி எதுவும் நடந்திருக்காது, உண்மையில், அப்போஸ்தலர்களை கட்டுபடுத்த முடியாத ஒரு நிலை தான் உருவாகியிருந்தது. பெந்தெகோஸ்தே நாளன்று, சபை பிறந்தது என்கிறோம், இந்த செய்தி மத்திய கடற்கரை பகுதி முழுவதும் பரவினது. இருந்தாலும் எல்லா இடங்களிலும் இந்த ஜனங்கள் என்னத்தை விசுவாசித்தார்கள் என்பதை தெளிவாக தான் கூறுகிறார்கள்! பல வருடங்களுக்கு பிறகு பவுல் ரோமர்களுக்கு நிருபம் எழுதினார், தேசலோனிகேயர்களுக்கு, என்று உங்களில் இருந்து சுவிசேஷம் உலகம் முழுவதும் பரவ துவங்கினது, இந்த மாதிரி தான் இருந்தது. (ரோமர் 1: 8 , 1 தெசலோ 1: 8) அவங்க சொன்ன எளிமையான செய்தி என்னவென்றால் இயேசு கிறிஸ்து ரோம சிலுவையில் மரித்தார் மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்தார். அவர்தான் நம்முடைய பாவங்களை மன்னித்து தேவன் இடம் நம்மை அழைத்து வருகிறவர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இது ஒரு கேள்வியை கொண்டுவருகிறது, சரியா, இந்த சபைகள் எல்லாம் நிறுவப்பட்டது என்று வைத்துகொள்வோம், இப்ப ஜீவனுள்ள இந்த அப்போஸ்தலர்கள் எல்லா இடத்திற்கும் போயிட்டு இருக்காங்க. அவங்கள யாரு என்ன கேள்வி கேட்க்க முடியும், அவங்க சபைகள் தோறும் பிரசங்கம் பண்ணினார்கள், தவறானவற்றை சரி படுத்தினார்கள். இந்த கேள்விக்கு பதில் வேணும், எப்படி ஆதிகால கிறிஸ்தவர்கள் இருந்தாங்க, அவங்களுக்கு புதிய ஏற்பாடு கிடைக்கும் முன் எப்படியிருந்தது – அப்ப அது எழுதப்படல – எது சரியான கிறிஸ்தவம் எது சரியானதல்ல என்று அவர்களுக்கு எப்படி தெரிந்தது? சரி, இங்க ஜீவனுள்ள சில வாலிபர்கள் இருக்காங்க, அவங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. எப்போதும் ஒரு விஷயத்தை நான் யோசிப்பதுண்டு, அவங்க திடீருன்னு உள்ள வந்து மரித்தவர்களை உயிரோடு எழுப்பினா, அதாவது, அது என்னுடைய கவனத்தை ஈர்ப்பதா இருக்கும், நா சொல்றது உங்களுக்கு புரியுதா! அப்ப நீங்க என்ன சொல்வீங்க, இந்த பையன் சொல்வதை கேட்கணும் என்பீர்கள். வியாதியஸ்தர்களை அவனால் சுகமாக்க முடியும் என்றால், அற்புதம் செய்கிற காரியங்கள் உங்களை ஒரு விசேஷித்த நம்பர் என்ற முத்திரையை பெரும்படியாக செய்திடும். இவங்களும் அப்படிதான் இருந்தாங்க இவங்கதா இயேசுவோடு அதிக நேரத்தை செலவிட்டவங்களும் கூட, அவங்க இந்த தகவல்களை பகிர்ந்துகொண்டார்கள், எது சரி எது தவறுன்னு சொல்றாங்க. ஆனா, இதெல்லாத்துக்கும் மேல, அவங்க அங்க இல்லாத போது, சபையில் சில ஒப்பந்த கூற்றுகள் அரங்கேற்றப்பட்டது, அதை நம்பப்படுகிற காரியங்கள் என்றும் சொல்லலாம்.

**Dr. டேரல் பாக்:** அதை நான் பள்ளிக்கூடம் என்பேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, அது என்னன்னு சொல்லுங்க உங்களுக்கு அது எப்படி தெரியும்.

**Dr. டேரல் பாக்:** சரி, இந்த பள்ளிகள் என்று சொல்வது உபதேசங்களின் எழுது படிவத்தை கொண்டிருக்கும் சிறிய துணுக்குகள் என்று சொல்லலாம். அவை உபதேசங்களின் சுருக்க உரை. அதெல்லாம் இரத்தின சுருக்கமாக இருக்கும். ரோமர் 1:2- நாலு சொல்கிறது ஒரே வரியில் இயேசு மனிதனாகவும் தேவனாகவும் இருந்தார் என்று. 1 கொரிந்தியர் 8:4-6 சொல்கிறது உலகத்தில் பல கடவுள்களும் தேவர்களும் இருக்கிறார்கள் ஆனால் நமக்கோ கிறிஸ்தவர்களாகிய நமக்கோ, ஒரே தேவனும் ஒரே பிதாவும் ஒரே இயேசு கிறிஸ்துவும் இருக்கிறார்கள். பிதாவையும் குமாரனையும் இது குறிக்கிறது. அப்பறம் 1 கொரிந்தியர் 15 சொல்லப்பட்டிருப்பது போல உயிர்த்தெழுதலை பற்றிய வரிகள் இருக்கிறது, இதில் சரீரத்தின் உயிர்த்தெழுதலை பற்றியும், மூன்று நாளில் அவர் உயிர்த்ததை பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை சொல்லுங்கள்.

**Dr. டேரல் பாக்:** சரி, கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்து, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அதற்கு பிறகு யாருக்கெல்லாம் தரிசனமானார் என்று பட்டியல் வருகிறது. (1 கொரிந்தியர் 15:3)

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நா அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாய் ஒப்புவிக்கிறதும் என்கிறார்...

**Dr. டேரல் பாக்:** உங்களுக்கு ஒப்புவிக்கிறதும். (1 கொரிந்,15:3)

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ... இந்த எவ்வளவு தூரம் செல்கிறது?

போயிட்டே இருக்கு, சிறந்த இறையியலாளரான கிரிஸ் பெர்மன் சொல்வதை போல சொன்னால், அது பின்னால, பின்னால, பின்னால, பின்னால, பின்னால போகுது...” துவக்கத்திற்கு செல்கிறது. அதாவது, இங்க என்ன சொல்லப்படுகிறது என்றால் பவுல் என்ன சொல்றாருன்னு கேட்டா 30 வருடத்தில் எனக்கு சம்பவித்த காரியங்களை 50 வது ஆண்டில் உங்களுக்கு நான் அவைகளை ஒப்புவித்து எழுதுகிறேன் என்கிறார். அதனால இந்த செய்தி ஆதிமுதலாக இருக்கிறது என்பதை புரிந்துகொள்கிறோம். யாருக்கும் சந்தேகமில்லை, சீஷர்கள் இயேசு கிறிஸ்து உயிர்த்தார் என்பதை அப்படியே நம்புகிறார்கள் என்பதில் யாருக்குமே அங்கு சந்தேகம் வரவில்லை. அவங்களுடைய விவாதங்கள் எல்லாம் அவர்கள் பெற்ற அனுபவத்தை சார்ந்து தான் இருந்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இந்த காரியங்களை தவிர்த்து இரண்டாவது விஷயம் ஒன்றுள்ளது, உபதேசங்களின் நம்பிக்கை பரவலாக இருந்தது, இருந்தாலும், ஜனங்கள் பாட துவங்கினார்கள் என்றிருக்கிறது.

**Dr. டேரல் பாக்:** அது உண்மைதான். புதிய ஏற்பாட்டு கீர்த்தனைகளும் இருக்கிறது. அதில் மிகவும் பிரபலமானவை பிலிப்பியர் 2:5-11 மற்றும் கொலோசெயர் 1:15-20

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** பிலிப்பியர் இரண்டாம் அதிகாரம்.

பிலிப்பியர் 2 சரியா. பிலிப்பியர் 2:5-11 மற்றும் கொலோசெயர் 1:15-20.

இது இரண்டுமே இயேசுவின் வாழ்வில் சம்பவித்தவைகளை பற்றிய பகிரங்கமான பகுதிகள். ஒரு பகுதியில் தம்மையே அவர் வெறுமையாக்கி, மாம்சத்தில் தோன்றுகிறார் தேவன் அவரை உயர்த்துகிறார். அது பிலிப்பியர் 2...

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** பிலிப்பியரை முதல்ல சொல்லுங்க, முதல் வசனம் இங்கிருக்கு, ஆறாம் வசனம்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** வசனம் ஆறு சொல்கிறது, “அவர், தேவனுடைய ரூபமாக இருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. அது நம்முடைய 7-11 போல இல்லை என்றுதான் சொல்வேன். உங்களுக்கு தெரியுமா இது என்னன்னு 7-11? 7 வார்த்தைகள் இருக்கும், அதை இன்றைய சபைகளில் 11 முறை பாடிடுவோம்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இதை இன்னொரு “அன்கெர்பெர்க்துவம் என்றிடலாமா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மை என்னன்னா, அந்த கீர்த்தனைகளை வாசிக்கும்போது, நிச்சயமா உங்களால சொல்ல முடியும் இந்த மாதிரியான இறையியல் அவர்களுடைய கீர்த்தனைகளில் இருந்திருக்கிறது, இல்லையா. அடுத்து கொலோசெயர், அங்க துவக்கம் எப்படி இருக்குது?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** கொலோசெயரில் இயேசு தேவனுடைய முதற்பலனானவர் என்றிருக்கிறது, மரித்தோரில் முதற்பலனானவர் அவரே. கொலோசெயர் 2 காரியங்களை பொதுவாக சுட்டி காட்டுகிறது, கொலோசெயர் 1:15-20, அவர்தான் நமது சிருஷ்டிகர்...

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** காணக்கூடாத தேவனுடைய சாயலாக இருக்கிறார்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** உண்மைதான். அவர்தான் நமது மீட்பர், ஏன்னா அவருடைய இரத்தத்தினால் நாம் இரட்சிக்கபட்டிருக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்று பகுதிகளிலும் இயேசுவின் இரத்தத்தை குறித்தும் இரட்சிப்பின் கிரியை பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது, சரியா. இதுல உபதேச போதனைகள் அடங்கியிருக்கிறது. இதே காரியங்களை தான் கீர்த்தனைகளாகவும் பெறப்பட்டிருக்கிறது. இது இரண்டுமே ஒன்றைத்தான் சொல்கிறது...

**Dr. டேரல் பாக்:** இங்க போதனையும் இருக்குது பாடலும் இருக்கிறது. அதாவது போதனையும் கிடைக்குது பாடலும் கிடைக்கிறது. ஞாபமிருக்கட்டும் போது ஜனங்க பாட்டு பாடும்போதும் வரிகளை மனப்பாடம் செய்வார்கள். இங்க ஆராதனையில் தான் போதனையும் நடப்பதாக காணப்படுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இது சபைக்குள் நடக்கிற காரியங்களாக இருக்கிறது. இதை தவிர சில புனித சடங்குகள் இருகிறது. ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி, ராபோஜனம். கிறிஸ்துவில் இருந்து இது எப்படி வந்தது இதில் என்ன இருக்கிறது என்பதை எனக்கு சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, ஞானஸ்நானம் என்று சொல்லும்போது அதுல கழுவப்படுதல் புதிய பிறப்பு போன்றவை அடங்கியிருக்கிறது என்று சொல்ல முடியும், அதாவது பெந்தெகோஸ்தே அனுபத்தில் சொல்லப்பட்டது போல ஒருவருக்கு ஆவியானவர் வந்து கிரியை செய்திடும் காரியத்திற்கு ஒப்பாக இருக்கிறது. கர்த்தருடைய பந்தி என்று சொல்லும்போது இயேசுவின் மரணத்தை நினைவுகூறுகிற செயலாக இருக்கிறது. இப்ப சரீரமும் இரத்தமும் இருக்கிறது, இயேசு கிறிஸ்துவின் ஜீவன், பாவத்திற்கான விலையை செலுத்தும்படியாக ஒப்புகொடுக்கப்பட்டது, அதினால் மன்னிப்பை பெறும்படி காத்திற்கும் நாம் தேவனுக்கு முன்பாக செலுத்த வேண்டிய எல்லாவற்றையும் அவர் செலுத்திவிட்டார் என்பதாக இருக்கிறது. எனவே கர்த்தருடைய பந்தி, இராபோஜனம், என்பதை இதைதான் சொல்கிறது. இந்த மூன்று நிலைகளில் கிறிஸ்தவ இறையியலின் அடிப்படை கோட்பாடுகளின் மையப்பொருள்களை பெற முடியும்: கல்வி போதனை, கீர்த்தனைகள் மற்றும் புனித சடங்குகள், இவை எல்லாவற்றையும் ஒன்றிணைத்து கூறுவதாக இருக்கிறது, அதைதான் ஆர்தடக்சி என்கிறோம். இந்த காரியத்தில் இருக்கிற அருமையான விஷயம் என்னவென்றால், இந்த பகுதியின் ஒவ்வொரு நிலையம், இவை மூன்றுமே சரி, ஒவ்வொரு வாரமும் ஆராதனையில் நடக்கும் போதும் ஒரு வித்தியாசம் உண்டாகும்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** நிச்சயமாக.

**Dr. டேரல் பாக்:** இந்த காரியம் பொதுவாக வழக்கமாக நடக்கிற ஒன்றாகும். இது திரும்பத்திரும்ப வலியுறுத்துகிறது. அதாவது ஒரு கீர்த்தனையின் அடியை திரும்ப திரும்ப பாடி மனப்பாடம் பண்ணுகிற நிலையை போல இருக்கிறது. கிறிஸ்தவ கீர்த்தனையை கற்றுகொள்வது போன்றது. அதாவது உட்கார்ந்து சைலன்ட் நைட் பாடலை மனப்பாடம் செய்வது போல இல்ல, இன்னைக்கு நா சைலன்ட் நைட் பாடலின் வரிகளை மனப்பாடம் செய்ய போகிறேன். இல்ல, நா உட்கார்ந்து அதை திரும்ப திரும்ப பாடி பார்த்துட்டே இருப்பேன். இறுதியாக அந்த இசையை கேட்கும்போது வரிகள் என் நினைவிற்கு வந்திடும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இதை தான் இவ்வளவு நேரம் பார்த்தோம், இது வரலாற்றில் குறுகிய காலத்தில் நடந்த சம்பவங்கள். உண்மை என்னன்னா, அடுத்த வாரம் நாம பார்க்க இருக்கிற காரியங்களை நாம இந்த அவுட்லினோடு இணைத்திட வேண்டும். உண்மையா, நாம இன்னும் அப்போஸ்தலர்களின் நிருபங்களை தொடவே இல்லை. ஜீவனோடு இருந்த அப்போஸ்தலர்கள் நிருபங்களையும் புத்தகங்களையும் எழுதினார்கள். நம்மிடம் நான்கு சுவிசேஷங்கள் இருக்கிறது, புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகளை பெற்றுகொண்டோம், அதை ஆணித்தரமாக சொல்ல விரும்புகிறேன், அது எப்போது சம்பவித்தது. அதோடு நின்றுவிடவில்லை அதற்கு பிறகு, ஜீவனோடு இருந்த அப்போஸ்தலர்கள் சொல்வதை கேட்ட அவர்களுடைய மாணவர்களும் சில காரியங்களை எழுத துவங்கினார்கள் அதுவும் நம்மிடம் இருக்கிறது. அவர்களுடைய மாணவர்களும் எழும்பினார்கள். இதுல எனக்கு பிடித்த விஷயம் என்னவென்றால் இந்த சங்கலி தொடரானது அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து வந்துகொண்டே தான் இருக்கிறது. நீங்க வரலாற்று ஆதாரங்கள் இயேசு வரைக்கு கொண்டு செல்லும் ஆவணங்களை பற்றி சொன்னீங்க, இது வியப்பாக இருந்தது, நாம சொன்னத ஜனங்கள் புரிந்துகொண்டார்கள் என்றால், இயேசு

துவத்தை பற்றி ஊடகங்களில் வரும் எல்லா விபரங்களையும் சுக்குநூறாக மாற்றிவிடும். இயேசுதுவம் மற்றும் கிறிஸ்தவம். ஏதாவது சொல்றீங்களா?

**Dr. டேரல் பாக்:** ஆமா, இங்க நாம ஊடகத்தை குறை சொல்வது கிடையாது. ஊடகங்கள் அனைத்தும் பொது இடங்களில் நடக்கும் விவாதங்களை எல்லாருக்கும் எடுத்து சொல்லுகிறார்கள், அதுதான் அவர்களுடைய வேலை. ஆனா ஊடகத்தின் மூலம் எதை தெரிந்துகொள்கிறோம். என்ன நடக்கிறது என்பதை புரிந்துகொள்வதும் எதை எடுத்துகொள்கிறோம் என்று கவனமாக இருப்பதும் முக்கியம். இதை தான் கவனத்தில் கொள்ள வேண்டும், முக்கியமா கிறிஸ்தவர்கள் இந்த மாதிரியான விவாதங்களில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் ஏன்னா ஜனங்கள் இதுதான் கிறிஸ்தவம் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் கவனம் தேவை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். டேரல் மற்றும் டேன் ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள், இயேசுவை வீழ்த்தும் காரியங்கள், ஆர்தடக்ஸ் கிறிஸ்தவர்களை இயேசுதுவத்தை பின்பற்றும் படி அவர்களை பின்னடைய செய்ய முயற்சிக்கும் அமைப்பை குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. அதை பற்றி வருகிற வாரங்களில் நிறைய விஷயங்களை பார்க்க இருக்கிறோம். ஆனா அடுத்த வாரம் இந்த அவுட்லைனை பூர்த்து செய்வதற்காக காரியங்களை பற்றி பார்க்கலாம் அவை நா விசுவாசிப்பவற்றைன் அடிப்படை காரியங்கள், நமக்கு வந்தடைந்த காரியங்கள் என்ன. தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.